Registered as a News Paper in Sri Lanka  பக்கங்கள்: 04  விலை ரூபா; 4:50

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் : 02  மார்ச்  (31 - 03 - 1991)  ஞாயிற்றுக்கிழமை  ஓசை: 41

## 1998 ஆம் ஆண்டு திகதியில் ப. நோ. கூ. ச. காசோலை!

ஒவ்வொரு வருடமும் வருட ஆரம்பத்தில் திகதிகள் குறிப்பிடும்போது தவறு ஏற்படுவது வழக்கம்; ஆனால் எதிர்வரும் 98 ஆம் ஆண்டில் உள்ள ஒரு திகதியில் வழங்கப்பட்டதாக ஒரு காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ளது; தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கமே இவ்வாறான காசோலையை வழங்கியுள்ளது. 8100ரூபாவிற்கு வழங்கப்பட்டுள்ள இக்காசோலையில் பொது முகாமையாளரும், தலைவரும் கையொப்பமிட்டுள்ளனர். நாட்டுநிலைவரம் இவ்வாறு அவர்களைகுழப்பத்திற்கு ஆழ்த்தியதுபோலும்?

## மன்னார் வேப்பங்குள மோதலில்

# 24 சடலங்களை விட்டு விட்டு

# சிறிலங்கா இராணுவம் ஓட்டம்

## 11 புலிகள் வீரமரணம், நவீன ஆயுதங்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட வேப்பங்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இருபத்திநான்கிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதேவேளை தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத மிகுதி இராணுவத்தினர் முகாம் நோக்கி ஓட்டமெடுத்தனர். பெருந்தொகையான நவீனரக ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம்மோதலில் பதினொரு விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்று அதிகாலை கஜுவத்தை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் காட்டுப்பாதை ஊடாக வேப்பங்குளம் பகுதியை வந்தடைந்தனர். இவர்களை வேப்பங்குளம் பகுதியில் வைத்துச் சுற்றிவளைத்த விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதிகாலை 5-30 மணிக்கு ஆரம்பித்த இந்த மோதல் நண்பகல் பன்னிரெண்டு மணி வரையும் நீடித்தது. புலிகளின் தாக்குதலுக்குத் தொடர்ந்து ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் கஜுவத்தை முகாமை நோக்கி ஓட்டமெடுத்தனர்.

மோதலின்பின்னர் அவ்விடத்தில் இருந்து இருபத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவு நவீன ஆயுதங்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார் கஜுவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது 24 இராணுவத்தினரின் சடலங்களுடன் பெருந்தொகையான நவீன ஆயுதங்களும் புலிகளால் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ மினிமினிஎல் எம். ஜி. 05
★ மினிமினி எக்ஸ் ரொக 05
★ 60 எம். எம். மோட்டர் 05
★ 60எம். எம். மோட்டர் ஷெல் 32
★ ஸ்கோப் 03
★ ஆர். பி. ஜி 01
★ ஆர். பி. ஜி. ஷெல்19
★ ஆர். பி. ஜி. புரொப்பலர் 18
★ 203 பிஸ்டல் (40எம். எம்) 01
★ 203 பிஸ்டல் ஷெல் 12

(4ஆம் பக்கம் பார்க்க)

## பதினொரு புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் கஜுவத்தை இராணுவ முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்றைய தினம் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் ஜான், பைமன், ரவி, கண்ணன், தஷான் பொஸ்கோ ஆகியோர் உட்பட பதினொரு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். வீரமரணமடைந்த போராளிகளின் முழுவிபரமும் நாளையதினம் வெளியிடப்படும்.

## ட்ரக் - ஓட்டோ விபத்தில் சாரதி உட்பட ஐவர் பலி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஓட்டோ ஒன்றும் சிறியரக ட்றக் ஒன்றும் மோதியதில் சாரதி உட்பட ஐந்து பயணிகள் ஸ்தலத்திலேயே மாண்டனர். இதில் சாரதிதவிர மீதி நால்வரும் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். ஓட்டோ சுக்கு நூறாகியது.

நேற்று நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் இந்தச் சம்பவம் அராலி செட்டியார் மடம் பகுதியில் இடம் பெற்றது. இந்த விபத்தில் இறந்தவர்கள் காரைநகர் களபூமியைச் சேர்ந்தவர்களாவர். இவர்களின் பெயர் விபரம் வருமாறு: க. ஆறுமுகம் (வயது 77), திருமதி. பத்மாவதி ஆறுமுகம் (வயது 60), ஆ. இந்துராணி (வயது 28), ஆ. யோகநந்தினி (வயது 18) ஆகியோருடன் ஓட்டோ சாரதி க. தனாநந்தம் (தனம் வயது39) என்பவரும் உயிரிழந்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## 94ஆவது ஜனன தினம்

இன்று தந்தை செல்வாவின் 94ஆவது ஜனன தினமாகும்.

அத்துடன் முன்னாள் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் இ. கதிரவேற்பிள்ளை அவர்களின் 9ஆவது சிரார்த்த தினமுமாகும்.

## விமானக் குண்டுவீச்சு

மன்னார் மாவட்டத்தில் இலவத்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5-30 மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசியுள்ளன; சேதமெதுவும் ஏற்படவில்லை;

## பெண் இராணுவத்தினர் வவுனியாவில் கெடுபிடி

(வவுனியா)

வவுனியாவில் பெண் இராணுவத்தினர் சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சமீபத்தில் வவுனியா தவசிகுளம் பகுதியில் இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய பெண் இராணுவத்தினர் மூன்று முறிப்பு வீதியில் உள்ள இராணுவத் தடை முகாம் பகுதியிலும் வவுனியா ரயில் நிலையப் பகுதியிலும் தாண்டிக்குளத்திலுள்ள சோதனை முகாமி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலையில் வயோதிபர் சிலர் பற்றி தகவலில்லை

(செ. தா. வை)

கீரிமலைப்பகுதியில், கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின்போது அப்பகுதியிலிருந்து வெளியேற முடியாத நிலையிலிருந்த வயோதிபர்கள் சிலர் இராணுவத்தினரிடம் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கீரிமலையைச் சேர்ந்த மகாலிங்கம், சாணையர் சிவனேசம் (அன்ரி), கவிணைச் சேர்ந்த எல்லுப்போலை, வீமர் (நாகன்) ஆகியோர் பற்றி இதுவரை எந்தத் தகவலும் தெரியவில்லை என்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கண்காணிப்புக்குழு எதிர்க்கட்சிகள் சந்திப்பு

உள்ளூராட்சித் தேர்தல்களை கண்காணிக்கவென சிறிலங்கா வந்துள்ள "சார்க்" நாடுகளின் கண்காணிப்பாளர்கள் எதிர்க் கட்சியினரையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர். நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டது முதல் வாக்குப் பதிவு மற்றும் வாக்குகள் எண்ணும் பணிவரையும் கண்காணிப்பு செய்யவுள்ள இவர்கள் வாக்குப்பதிவு முடிவுற்று முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரும் பொதுமக்களின் புகார்களைப் பெறுவதற்காக இரு நாட்கள் தங்கியிருப்பர் எனத் தெரியவருகிறது.

## உள்ளூராட்சி தேர்தலில் ஐ.தே.கட்சி இ.தொ.கா.கூட்டு

(கொழும்பு)

அம்பேகமுவ, நுவரெலியா, வலப்பனை, கொத்மலை ஆகிய பிரதேசசபைகளுக்கும் நுவரெலியா மாநகரசபை, அட்டன்-டிக்கோயா நகரசபை தலவாக்கலை லிந்துல நகரசபைகளுக்குமான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், தொண்டமான் தலைமையிலான இ. தொ. காவும் இணைந்து போட்டியிடுகின்றன.

அம்பேகமுவ, நுவரெலியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ் விழா ஏப்ரல் 6 முதல் 15 வரை

## வரிவிளம்பரம்

**தேவை**

பாவித்த சம்போ, ஒடிக்கலோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொலிஸ்டீன் போரை, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்; என். சத்தியன், 55, மணிக் கூட்டு வீதி, கொழும்புத் துறை பின்புறம், யாழ்ப்பாணம்; (B. 2169)


## சதாமின் படைகள் கிர்குக்கில்?

ஈராக்கின் வட பகுதியை மீண்டும் தங்களது கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவரப் போரிடும் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் படைகள் பெரும் வெற்றியை ஈட்டிவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன; எண்ணெய் வளம் மிகுந்த நகரமான கிர்குக் தற்சமயம் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக அவர்கள் அறிவித்துள்ளனர்;


## முக்கிய அறிவித்தல்

ஆர்; வி. ஜி. பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதாக அறியவந்துள்ளோம்; போலி ஆர்; வி; ஜி பீடிகள் விலையிலும் தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தரு கின்றோம். அசல் ஆர்; வி. ஜி. பீடிகள் எமது ஸ்தாபன வாகனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன; குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர்; வி; ஜி; பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்; போலி ஆர் வி. ஜி. பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்;

ஆர்: வி: ஜி. நிர்வாகம்

58, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

(R - 2179)



## விக்னா
## டியூசன், சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்;

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**91 Dec.**
**O/L DAY CLASSES**
(8-30 – 1-30)

ஆரம்பமாகிவிட்டது (27—03—1991)

ஆண்டு 6, 7, 8, 9, 10 ஆம் வகுப்புக்கள்

ஆரம்பம்: 3. 4. 1991

மு; குறிப்பு: எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.

(B—2221)


## அந்தியேட்டி அழைப்பிதழ்

ந. தம்புத்துரைசாமி

| சிதாலெட்சுமி (ஜேக்கா) | விஜயசிங்கம் (கப்டன் அமலன்) |
|---|---|
| ஜனனம்- 23-06-70 | 10-03-69 |
| வீரமரணம் 30-11-90 | 04-01-91 |

03-04-91 புதன்கிழமை காலை மாதகல் கனால் வீதி காசிகேசமூர்த்தி இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும், ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், அனுதாபிகள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்;

கனால் வீதி,
மாதகல்.

ந. தம்புத்துரை
மயிலிட்டி

(R- 1207)


## A/L 91 DAY CLASSES

ஆரம்பம்: 05-04-1991 (காலை 8 மணி)

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்;

(B. 2222)




## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 31

1986ஆம் ஆண்டு வந்தாறுமூலையில் சிறீ லங்கா அதிரடிப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**ஸ்ரார்** (வ; பொன்னம்பலம் கல்வயல் சாவகச்சேரி)

**விமல்ராஜ்**

1987ஆம் ஆண்டு எதிர்பாராத வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**குட்டி** (இரத்தினராசா மனோராஜ் வல்வெட்டித் துறை)

**ரதன்** (கா. திலகேஸ்வரன் கரவெட்டி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நினைவில் நீங்கள்
நீங்கா இடம் பெற்றீர்!
முனைப்புடன் தமிழீழ
விடுதலைப் போரில்
உழைத்தீர்! அதனால்
உங்கள் நாமம்
என்றும் நிலைக்கும்!

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2163)


## சாயி அக்குபங்சர் சிகிச்சை நிலையம்

★ வாதம்
★ ஆஸ்த்மா
★ மூட்டுக்காய்ச்சல்
★ நீண்டநாள் மனநோய்கள்

மற்றும்

மாற்றமுடியாது எனக் கணிக்கப்பட்ட நீண்டநாட்கள் கொண்ட எந்த வகையான நோய்களாக இருந்தாலும்

"வர்மானிய அலகு முறைச் சிகிச்சை"

எனப்படும் தமிழ் அக்குபங்சர் சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கப்படும்.

**வைத்திய கலாநிதி V. P. சுந்தரராஜன்**

(விசேட அக்குபங்சர் சிகிச்சை நிபுணர்)

இல: 10 பருத்தித்துறை வீதி, யாழ்நகர்;

குறிப்பு: முழுக்க முழுக்க தமிழ் முறையிலும், அதி நவீன முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும். (B 2129)



# யாழ்மாணை

## இசை வகுப்புக்கள்

♪ வயலின் ♪ ஓகன்
♪ புல்லாங்குழல் ♪ கிற்றார்

ஆசிரியர்:
பா. கண்ணன்

மெதடிஸ் மிஷன்
பாடசாலை அருகில்,
ஆனைப்பந்தி.

(B-2290)

### ✵ சிந்தனைக்கு ✵

அரசியல் கட்சியில் நாணயம் என்பது சமயோசிதம்.

— குரோவர் க்ளீவ் லெண்ட்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 31-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# யானையின் முதுகில் சேவல்?

தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் காலக்கெடுவும் முடிவடைந்துவிட்டது.

இத்தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரசும் சேர்ந்து போட்டியிடுகின்றன. இந்தியத் தமிழ் மக்களின் வாக்குகள் அதிகமுள்ள அம்பேகமுவ, நுவரெலியா, வலப்பனை, கொத்மலை ஆகிய பிரதேச சபைகளுக்கும், நுவரெலியா ஹட்டன் – டிக்கோயா, தலவாக்கொல்லை நகரசபைகளும் இரு கட்சிகளும் இணைந்து ஒரே பட்டியலில் போட்டியிடுகின்றன. இதில் அம்பேகமுவ, நுவரெலியா பிரதேச சபைகளுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சேவல் சின்னத்தின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட ஏனைய பிரதேச சபைகளிலும் நகரசபைகளிலும் ஐக்கியதேசியக் கட்சியின் யானைச் சின்னத்தின் கீழ் இலங்கைத் தொழிலாள காங்கிரஸ் போட்டியிடுகின்றது.

இம்மாற்றம் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பமாகும். எதிர்க் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஏனைய கட்சிகளும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக ஒரு கூட்டணி அமைக்க முடியாமல் போனதற்கு எந்தச் சின்னத்தில் போட்டியிடுதல் என்பதே பிரதான முட்டுக்கட்டையாக இருந்தது. இதன் காரணமாகவே எதிர்க்கட்சிகள் ஒன்றுபட முடியாமல் பிளவுபட்டுள்ளன. இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் இம்முடிவு மலையகத் தமிழரின் வாக்கின் முக்கியத்துவத்தை வெளிக்காட்டியுள்ளது.

அத்தோடு, கொழும்பு மாநகரசபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஒரு தமிழரை நியமிக்கும் முயற்சிகள் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் இத்திடீர் மாற்றத்திற்கும் தமிழர் மீது எழுந்துள்ள பற்றுதலும் தேவையில்லாமல் ஏற்பட்டதில்லை. கடந்த காலத்தைப் போல் தனது வெற்றியில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எழுந்துள்ள சந்தேகமே முக்கிய காரணமாகும்.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் தென்னிலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது. அவ் எதிர்ப்பியக்கம் அன்னையர் முன்னணி என்ற பெயரில் விசுவரூபம் எடுத்துள்ளது. இதனை தமது தேர்தல் இலாபத்திற்காக எதிர்க்கட்சிகள் திட்டவட்டமாகப் பயன்படுத்திக் கொள்ளவுள்ளன அத்தோடு நாட்டில் தொடர்ந்துவரும் நெருக்கடிநிலை, வேலையின்மை, விலைவாசி ஏற்றம் என்பனவும் பெருமளவு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும்.

முஸ்லிம்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள குழப்பமும் ஐக்கியதேசியக்கட்சி இலங்கைத்தோட்டத்தொழிலாளர் காங்கிரசுடன் கூட்டு வைத்துக்கொள்வதற்கு காரணம் எனலாம். கடந்தகாலத் தேர்தல்களின் போதெல்லாம் முக்கியமாக முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த முன்வந்த ஐக்கியதேசிய கட்சி இம்முறை அவ்வாறான முயற்சிகளில் பெருமளவில் ஈடுபடவில்லை. இம்முறை முஸ்லிம்கள் தமதுபக்கம் வாக்களிப்பார்களா என்ற சந்தேகம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளமையே இதற்கு காரணம் ஆகும்.

தற்பொழுது முஸ்லிம்களில் பலர் ஐக்கிய தேசிய கட்சி தமக்கும் தமிழருக்கும் இடையில் பகைமையை வளர்த்து தான் லாபம் சம்பாதித்து விட்டது என்பதை உணரத் தொடங்கியுள்ளார்கள். இதனால், முஸ்லிம் மக்கள் பெரும் குழப்பத்தில் உள்ளார்கள். மேலும், வளைகுடாப்போரின் போது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமெரிக்காவிற்கு ஆதரவான முடிவுகளை எடுத்தமை அக்கட்சி மீது முஸ்லிம்களுக்கு இருந்த நம்பிக்கையை குறைத்து விட்டது. முஸ்லிம்கள் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக ஆர்பாட்டங்கள் நடத்தியும் எதுவித பலனும் கிடைக்கவில்லை இதனால் கடந்த காலங்களைப் போல் முஸ்லிம்களின் வாக்குகளை ஐக்கிய தேசியகட்சியினால் திரட்ட முடியும் என்பது சந்தேகமே.

இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி இறங்கிவந்து இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ்சுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொண்டுள்ளது. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி இறங்கிவந்து தேர்தல் உடன்பாடு செய்து கொண்டாலும் லாபம் அடையப் போவது ஐக்கிய தேசியக்கட்சியே ஒழிய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் அல்ல. ஐக்கிய தேசியகட்சி இந்நடவடிக்கை மூலம் தனது ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்வதோடு இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ்சின் தனித்துவத்தையும் சிதைத்து விடக் கூடியதாகவும், அதாவது முஸ்லீம் தலைமைகள் எவையும் அரசியலில் தலைஎடுக்க முடியாதது போல் மலையக தமிழ்மக்களும் அரசியலில் தனிச் சக்தியாக தலை எடுக்க முடியாது போய்விடும்.

---

யாழ். கல்வித் திணைக்களம்

# தமிழை அமுல் படுத்தாதது வேதனைக்குரியதாகும்

இடமாற்றம் பெற்று யாழ் மாவட்டத்திற்கு வந்த ஆசிரியர்கள் தமது சம்பள விபரத்தை சத்தியக்கடுதாசிமூலம் சமர்ப்பிப்பதற்காக யாழ். கல்வித்திணைக்களத்தால் தயாரித்து வெளியிடப்பட்ட படிவம் தமிழில் இல்லாத வேறு மொழியில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் வன்மையாகக் கண்டனம்தெரிவித்துகல்விப்பணிப்பாளருக்கு கடிதமனுப்பியுள்ளார். யாழ் கல்வித் திணைக்களமே தமிழ் மொழியை அமுல் செய்யாமல் இருப்பதுமிகவும்வேதனை தருவதாக உள்ளதாகவும் இப்படிவங்களை தமிழ் மொழியில் படிவத்தை தயாரித்து ஆசிரியர்களுக்கு வழங்கும் படியும் சங்கத்தின் பொதுச் செயலாளர் கோரியுள்ளார்.

அதே சமயத்தில் தமிழ் மொழியிலலாத கல்வித் திணைக்களத்தால் வழங்கப் படும் எந்தக் கடிதங்களையோ அல்லது படிவங்களையோ ஏற்காது அதைக் கல்விப்பணிப்பாளருக்கே திருப்பி அனுப்பிவிட்டு அவ் விடயத்தை தனது கவனத்திற்குக் கொண்டுவரும்படியும் சங்கத்தின் பொதுச் செயலாளர் யாழ்மாவட்டத்திலுள்ள அதிபர், ஆசிரியர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

- மகாசிவம்

## கவி அமுதம் வெளியீட்டு விழா

(நல்லூர்)

செல்வன் த தர்மேந்திராவின் குழந்தைக் கவி அமுதம் நூல்வெளியீட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 3.30 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா இன்று ஞாயிறு மாலை நான்கு மணியளவில் நடைபெறும். யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் சனசமூக நிலையத்தை மங்கள விளக்கேற்றித் திறந்து வைப்பார்.

## இல்ல விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் கடந்த 28 03.91 இல் இல்லங்களுக்கு இடையேயான விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. இதற்கு உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. தியாகராசா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

இப்போட்டியில், மஞ்சள் சிகப்பு, நீல இல்லங்கள் முறையே 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களை தட்டிக்கொண்டன. வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை திரு. சி. தியாகராசா அவர்களும் தெற்கு கொத்தணி அதிபர் திரு. ஆர். அருளானந்தம் அவர்களும் வழங்கி கௌரவித்தனர்

## போலி முகவர் கைது

போலி விசாவுடன் கனடாவிற்கு ஆட்களை அனுப்பும் நபரொருவர் கடந்த வியாழன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

தமிழ் வாலிபனையும், யுவதி ஒருவரையும் போலி விசாக்களுடனும், ஆவணங்களுடனும் கனடாவிற்கு கூட்டிக் கொண்டுசென்ற ஒருவரே இவ்வாறு கட்டுநாயக்கா புலன் விசாரணைப்பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

## மாணவர்களுக்கான அன்னை பூபதி பொது அறிவுப் போட்டி

### பரீட்சை விதிகளும் வழிகாட்டல்களும்

1. பரீட்சிக்கப்படும் விடயங்கள் :
இரு பரீட்சைகள் நடைபெறும். ஒன்று பொது அறிவுப் போட்டி மற்றயது கட்டுரைப்போட்டி.

2. பதிலிறுக்கப்பட வேண்டிய முறை :
பொது அறிவுப்போட்டியில் கீழ் வரும் ஒவ்வொரு தலையங்கங்களிலும் ஐந்து கேள்விகள் கேட்கப்படும். ஒவ்வொரு தலையங்கத்தின் கீழும் குறைந்தது மூன்று கேள்விகளுக்கு பதில் எழுத வேண்டும் மூன்றுக்கு மேற்பட்ட கேள்விகளுக்கு பதில் தரப்பட்டிருந்தால் இந்தப்பதில்களுக்கு ஏனையவற்றிற்குரிய புள்ளிகளில் அரைப்பகுதியே கிடைக்கும். இவ்விதமாக மொத்தம் 64 கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும். 11 ஆவது, 12 ஆவது தலையங்கங்களில் கீழ் ஒவ்வொன்றிலும் இரு கேள்விகளுக்கு மாத்திரம் பதிலளிக்க வேண்டும்.

கட்டுரை எழுதுவதற்காக பதினொரு தலைப்புக்கள் தரப்படும். இதில் அன்னைபூபதி பற்றிய கட்டுரை கட்டாயமானதாகும் ஏனைய 10 தலையங்கத்தில் ஏதாவது ஒன்றின் கீழ் கட்டுரை வரையலாம்.

1. பாடசாலை சமூகக்கல்வி பாடத்திட்டத்தை ஒட்டியவை
2. பாடசாலை வரலாற்றுப் பாடத்திட்டத்தை ஒட்டியவை
3. பிரதேச கோள அமைப்புத் தொடர்பாக
4. பிரதேச பூர்வீக வரலாறு தொடர்பாக
5. தற்போதைய யுத்த நிலைமை எமது பிரதேசத்தில் அதன் தாக்கம்
6. இலங்கைத் தீவின் பகுதியின் நிகழ்கால அரசியல் வரலாற்றை ஒட்டியவை
7. தமிழ் நாட்டு அரசியல் வரலாறு
8. இந்திய - தமிழீழ யுத்த காலம் (1987 – 1989)
9. பிரதேசத்தின் பின்பான சமூக பண்பாட்டியல் மாற்றங்கள், கலை, இலக்கியத்துறை வளர்ச்சிகள்
10. பிரதேசத்தின் பொருளாதாரவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்
11. மதம் பற்றியது (மூன்று கேள்விகள்)
12. விளையாட்டு பற்றியது (மூன்று கேள்விகள்)
13. விஞ்ஞானம் - சடப்பொருட்கள்
14. விஞ்ஞானம் - சக்தி
15. சர்வதேச அரசியல் - சர்வதேச அரசியல் போக்கு
16. ஆண் - பெண் சமத்துவம், சாதி பேதங்கள் ஆகியவை தொடர்பாக
17. சர்வதேச அரசியல் - சமகால தேசிய விடுதலைப் போராட்டங்கள்
18. சுகாதாரம் (பிரதேச சுகாதார நிலையும், நோய்களும்)
19. பிரதேச குடிசனப் பரம்பல்
20. தென்தமிழீழ நிலைமைகள்
21. இயற்கை மாசுபடுதல் தொடர்பாக
22. பிரதேசத்தின் செயற்படும் அரசியற் கட்சிகள், அல்லது பிற அமைப்புக்கள், இக்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் கட்டுரை வரும்.

குறிப்பு:-
வன்னிப் பிராந்தியத்திற்கான வினாக்களும், யாழ் தீவகற்பத்திற்கான என்று வருபவை பதில் கூறுபவரின் பிரதேசத்தையே குறிக்கும்.

பரீட்சார்த்திகளுக்கான தகைமைகள்

"அன்னை பூபதி சாதாரணதர அறிவுப்போட்டி" 15 வயதுக்கு கட்பட்டவர்களுக்கானது.

"அன்னை பூபதி உயர்தரப் பிரிவு பொது அறிவுப் போட்டி 15 வயதுக்கும் 21 வயதுக்கும் உட்பட்டவர்களுக்கானது.

கல்வி நிறுவனங்களுக்குச் செல்வோர் செல்லாதோர் என்ற பாகுபாடு கணக்கில் கொள்ளப்படமாட்டாது.

பரீட்சை நிலையங்கள்
பத்திரிகை வாயிலாகப் பின்னர் அறிவிக்கப்படும்.
திகதி........

வெற்றி கொண்டோருக்கான பரிசில்கள்

★ சாதாரண சித்தி பெறும் மாணவர்களுக்கு
★ விசேட சித்தி பெறும் மாணவர்களுக்கு
★ அதிவிசேட சித்தி பெறும் மாணவர்களுக்கும்
★ கொத்தணி ரீதியாக கூடக் கூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கும் புலமைப் பரிசில் வழங்கப்படும் சுற்றாடல், சமூகக்கல்வி, வரலாறு ஆகியவை தொடர்பாக இரண்டு நாள் விசேட பயிற்சி வழங்கப்படும். அத்துடன் நான்கு நாள் சுற்றுலா ஒன்றும் ஒழுங்கு செய்யப்படும்.

★ மாவட்ட ரீதியாக முன்னணி வகித்த பாடசாலைக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஆகியோருக்கான வேண்டுகோள்

அன்னை பூபதி பொது அறிவுப் போட்டி பரீட்சைக்கான விண்ணப்பதாரர்களுக்கு விசேட பயிற்சி வகுப்புக்கள் நடத்தி தயார்ப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். பதிலையும் மனப்பாடம் செய்யும் முறையிலான பயிற்சிகள் வேண்டாம். வீட்டிலிருந்து சப்பி சோதனை மேசையில் வைத்துத் துப்பும், சப்பித் துப்பும் கல்வி வேண்டாம். இத் தலையங்கங்களின் கீழ் மாணவர்களுக்கு பரந்த அறிவை ஊட்டுங்கள். அதிகமானோரை விண்ணப்பிக்க ஊக்கப்படுத்துங்கள்.

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

# தமிழீழ மக்களின் உணர்வுகளின் ஒட்டுமொத்தவடிவம் அன்னைபூபதி

## -விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்

(நமது நிருபர்)

தமிழீழ மக்களின் உண்மை நிலையை எடுத்துக் காட்டவும், இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்தும் தமிழீழ மக்களின் ஒட்டுமொத்த வடிவமாக அன்னைபூபதி தனது சாவும் வரை உண்ணாநோன்பை நடாத்தினார் என விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் அன்னைபூபதி பொது அறிவுப் போட்டிப் பரீட்சை தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

தமிழீழ இந்தியபோர்நடந்து கொண்டிருந்த போது தமிழீழத்தில் தமிழ் மக்களைப் பாதுகாக்கிறோம் என உலகை ஏமாற்றிய வண்ணம் தமிழீழ மக்களை இனப்படுகொலை செய்துவந்த காலம்.

எல்லாச் செய்திகளும் இருட்டடிப்பு செய்யப்பட்ட காலம் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தவிர ஒரு சிலரே இந்திய ஆக்கிரமிப்புக்கெதிராகக் குரல் கொடுத்தனர். அவர்களும் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர்.

தன்னை வருத்தி, தன் தனிப்பட்ட வாழ்க்கையை விட்டு தனது தாயகத்தின் நலன் கருதி அன்னை தன் உயிரை ஈகம் செய்தாள்.

இப்படியான உணர்வுகளை வளர்த்தெடுக்காத கல்வியறிவு பயனற்ற கல்வியே. தான் வாழும் சூழலைப் புரிந்துகொள்ளாமல், தேவைகளை உணர்ந்து கொள்ளாமல், தன்னை உணர்ந்து கொள்ளாமல் சரியாகத் தான்வாழும் நாட்டிற்குச் சேவை செய்யமுடியாது.

இப்படியான தன்மையை வளர்த்துக்கொள்ளும் அறிவே பொது அறிவாகும். தன்னை வருத்தி தன் தனி வாழ்வை எண்ணாமல் இந்த மண்ணுக்காய் தன் உயிரை ஈகம் செய்த அன்னையின் நினைவு நாள். அறிவு வளர்ச்சிக்கான மாணவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளும் ஒரு நல்ல நாளாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடே இப் பொது அறிவுப்போட்டியாகும். (போட்டி விதிகள் உள்ளே)

# ஆயர் தாக்கப்பட்டமை குறித்து மதத் தலைவர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மறை மாவட்டத்தின் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் தாக்கப்பட்டமை ஆட்சேபிக்கும் முகமாக அனைத்து மதத் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் இன்று மாலை ஐந்து மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பாலம் என்ற பொதுப் பணி மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கூட்டத்தில் சகல மதப் பிரதிநிதிகளையும், மதசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு பாலம் அமைப்பின் செயலர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் கோரப்பட்டுள்ளது.

## "அனைவரும் அவரே"

(குருநகர்)

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு இன்று (31-3-91) மாலை 6 மணிக்கு யாழ். பிரதான வீதியில் திருமறைக் கலாமன்றக் கலை அரங்கில் "அனைத்தும் அவரே" என்னும் தவக்கால சிந்தனைகளைக் கொண்ட நாடகம் மேடை ஏறும். பிரவேசம் இலவசமென அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

## மான் குத்தி இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று ஆனைக்கோட்டையை சேர்ந்த இளைஞர் ஒருவர் கன்னத்தில் மானிடம் குத்து வாங்கிய நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எஸ். சற்குணபாலன் என்ற 16 வயது இளைஞரே இவ்வாறு கன்னத்தில் மானின் குத்துக்கு இலக்கானவர் ஆவார். தவறி வீழ்ந்த பணத்தை எடுக்க இவ் இளைஞர் குனிந்தபோது அருகே நின்ற மான் கொம்பினால் குத்தி விட்டதாக இவர் தெரிவித்தார். (லோ)

## வளைகுடா நெருக்கடியால்

# புலிகள் ஆயுதம் கொண்டுவரும் முயற்சி தடைப்பட்டது —சிறில் ரணதுங்க

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இராணுவ ஆயுதங்களை கோசிடின் போர்க் என்ற கப்பலில் ஏற்றி வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். தொலைதூர ஏவுகணைகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தும் ஆயுதங்கள், வெடிமருந்துகள் ஆகியனவும் இதில் அடங்கியிருந்தன. இவை புலிகளினால் கடந்த ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி கொள்வனவுசெய்யப்பட்டன. வளைகுடா நெருக்கடிகளினால் ஆயுதங்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு வருவதற்கான முயற்சி கைகூடவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மற்றொரு தொகுதி ஆயுதங்களையும் தமது கெரில்லா நடவடிக்கைகளுக்கென சிங்கப்பூரிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். மலேசியா அதிகாரிகள் கடந்த ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி இதனைக் கண்டுபிடித்தார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தகவல்களைத் தெரிவித்தார்.

# இனந் தெரியாதவர் சடலம் புலிகளால் மீட்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் வடமராட்சி தோட்டப்பகுதியில் இனந்தெரியாதவரின் சடலமொன்று விடுதலைப்புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள மரமொன்றில் தூக்கிலிட்டுத் தற்கொலை செய்துகொண்டவரின் இந்தச் சடலம் 60வயது மதிக்கத்தக்க வயோதிபருடையது.

இவர் தூங்கிய மரத்தினடியில் 006 ஏ பி 1441 இலக்க முடைய நீலநிற ஏசியாசைக்கிள் புலிகளால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் மிருசுவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் வந்து சந்திக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

# இ. காங்கிரஸ், அ.இ.தி.மு.க. தொகுதி உடன்பாடு

(சென்னை)

தமிழ் நாட்டிலும், புதுச்சேரியிலும் லோக் சபா, சட்டசபைத் தேர்தல்களில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கைப்படி தமிழ் நாட்டில் உள்ள 39 லோக் சபாத் தொகுதிகளில் 28 தொகுதிகள் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், 11 தொகுதிகள் அ.இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரி லோக்சபாத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை நிறுத்தும்.

நேற்றுச் சென்னையில் அ.இ.அ.தி.மு.க.வின் பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதாவுடன் ஆலோசனை கலந்த பிறகு இந்திரா காங்கிரஸின் தலைவர் ராஜீவ் காந்தி இந்தத் தொகுதி பங்கீடு பற்றிச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை 11 50 மணியளவில் வலாய்ப் பகுதியை நோக்கி நான்கு ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. சேதமெதுவும் ஏற்படவில்லை.

## படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றைய தினம் ஏவப்பட்ட ஷெல் ஒன்று பூநகரி வினாசியோடைப்பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் அப்பகுதியைச் சேர்ந்த S சிறீஸ்கந்தராசா 28 என்பவர் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு)

## கடற்படைக் கப்பலில் 25 பேர் தடுத்துவைப்பு

(செ. த. மை)

சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களுள் வல்வெட்டித்துறையை சேர்ந்த இரு குடும்பஸ்தர்கள் கொடூரமான சித்திரவதைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வைத்தியநாதன் வடிவேலழகன் (27 வயது), நடனசிகாமணி ரவீந்திரராசா (32 வயது) ஆகிய இருவரும், படகொன்றில் சென்று கொண்டிருந்த சமயம் கடந்த 8 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நடுக்கடலில் நங்கூரமிடப்பட்டிருக்கும் கடற்படையினரின் பாரிய கப்பலுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனராம்.

இக்கப்பலில் சுமார் 25 பேர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், 20 நாட்கள் நடைபெற்ற விசாரணையின்போது தாம் கடுமையாகச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் உடலின் சகல உறுப்புக்களிலும் மின்சாரம் தாக்கிய காயங்கள் காணப்படுகின்றன. கை, கால்கள் உணர்வற்ற நிலையிலிருக்கின்றன.

இவ்விருவரும் கடந்த 28ஆம் திகதி காரைநகர் கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். அங்கிருந்து கட்டப்பட்ட நிலையில் குறிகட்டுவானுக்கு கொண்டுவரப்பட்டு, பின் அன்றுமாலை 6 மணிக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். இவர்களை விடுதலைப் புலிகள் அழைத்துவந்து வீடுகளுக்கு அன்புடன் அனுப்பிவைத்தனராம்.

# 60 ஆண்டுகளின் பின் தேர்தலில் பல கட்சிகள் போட்டி

(திரானா)

அல்பேனியா நாட்டில் கடந்த அறுபதாண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக இன்று பல கட்சிகளின் அடிப்படையில் தேர்தல் நடைபெறுகிறது. 250 உறுப்பினர்களை நாடாளுமன்றத்திற்கு வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கவுள்ளனர். தேர்தல் பிரசாரங்கள் நேற்று முன்தினம் முடிவடைந்தன. பிரமாண்டமான பேரணி ஒன்றை ஏற்பாடு செய்திருந்த எதிர்க் கட்சியான ஜனநாயகக் கட்சி, சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றை கோரியிருப்பதுடன் தாம் பதவிக்கு வந்தால் கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு முடிவுகட்டப் போவதாய் அறிவித்துள்ளனர்.

## 10,000 ரூபா அபராதம்

(செ. த. மை.)

கசிப்பு உற்பத்தி செய்த உற்பத்திக் குழுத்தலைவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விடுதலைப் புலிகளால் விதிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராயைக் கிழக்கைச் சேர்ந்தவருக்கே நேற்று அபராதம் விதிக்கப்பட்டது.

## விபத்தில் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைச் சந்தியில் ஓட்டோவும், மோட்டோர் சைக்கிளும் மோதியதில் குடும்பப் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

சங்கரத்தையை சேர்ந்த திருமதி மகேஸ்வரன் என்பவர் படுகாயமுற்றநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு)

ட்ரக்

ஓட்டோ சாரதி தனம் அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து அவருடைய மறைவுக்கு அஞ்சலி செலுத்து முகமாக இன்று யாழ். ஓட்டோசங்கம் தமது சேவையை நிறுத்திக்கொண்டுள்ளது. (மு) (லோ)

24 சடலங்களை

நான்கு இராணுவத்தினரின் சடலங்கள் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. ஆனால் இதனை விட மேலும் பல இராணுவத்தினர் இறந்திருக்கலாம் எனத் தெரியவருகின்றது.

இந்த மோதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினர் கஜபாகு படைப் பிரிவைச்சேர்ந்த விசேட பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெருமளவு

- ★ எப். என். சி. ரகத்துப்பாக்கிகள் 16
- ★ மகஸின்கள் 91
- ★ 5.56 ரவைகள் 31500
- ★ பராளைட் 02
- ★ 60 எம். எம். மோட்டர் பரால்கள் 02
- ★ ஜே. ஆர். குண்டுகள் 39
- ★ புகைக்குண்டுகள் 06
- ★ சி. எல். சி. வெடிமருந்துக் கம்புகள் 04
- ★ ஹெல்மட் 32
- ★ மிதிவெடிப் பாதுகாப்புச் சப்பாத்து 1 சோடி
- ★ தண்ணீர்ப்போத்தல்கள் 29
- ★ தண்ணீர்ப் போத்தல் கோல்சர் 26
- ★ பிட்பாய்க் 25
- ★ ஜக்கற் கோல்சர் 07
- ★ இராணுவ சப்பாத்துகள் 25 சோடி
- ★ இராணுவ பெல்ட் 20

ஆகியவை புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

உள்ளூ

பிரதேசசபைகளுக்கான தேர்தலில் இ. தொ. காவுடன் இணைந்து ஐ. தே. கட்சி சேவல் சின்னத்தில் போட்டியிடுகிறது. ஏனைய இடங்களில் ஐ. தே. கட்சியுடன் இ. தொ. கா இணைந்து யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிடுகின்றன.

பெண்

லும் சேவையிலீடுபடுத்தப் பட்டுள்ளனர்.

தாண்டிக்குளம் வீதியில் சோதனையிலீடுபட்டுள்ள பெண் இராணுவத்தினர் ஆண்கள் மீது மிக மோசமான கெடுபிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சியை முடித்துக் கொண்டு சோதனை நடவடிக்கையிலீடுபட்டுள்ள பெண் இராணுவத்தினரில் ஒருவர் மட்டும் முஸ்லிம் பெண் ஆவார். (தி)

கீரிமலையில்

றும். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய முடியவில்லை என்றும் இவர்களின் உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கீரிமலை-நகுலேஸ்வரம் அன்னம்மாள் ஆலயத்துக்கருகாமையில் இரு சடலங்களும் கீரிமலைப்பகுதியில் ஒரு சடலமும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு